நாள்: 17.03.2026.
O.S. No. 29/2019
பெயர்:  மதியழகன் த/பெ. சுப்பையன்
வா.சா.1

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்பட்டடுள்ள வரைபடம் வழக்கு சொத்துக்கானது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு அ பதிவேடு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தின் புல எண் 5/5 ஆகும். வழக்குரை தாக்கல் செய்தபோது வழக்கு சொத்தின் புல எண் 5/A2 என்று குறிப்பிட்டு இருந்தேன் என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு மேற்கே உள்ள சுவற்றை ஒட்டி லட்சுமணன் சொத்திற்கு இடையே காலி மனையும் சந்தும் உள்ளது என்றால் காலி மனை உள்ளது ஆனால் சந்து இல்லை. வழக்கு சொத்திற்கு வடக்கு பக்கம் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு வடக்குபுறம் எனது சொத்தும் உள்ளது பிரதிவாதியின் சொத்தும் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி அவரது வீட்டின் நான்கு தலைமுறையாக வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் பிரதிவாதி சொத்தை அபகரிக்க வேண்டி வழக்குரையில் நான்கெல்லை விவரங்களை தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தினி விஸ்திரம் 4 சென்ட் என்றால் சரிதான். அந்த 4 சென்ட் நிலத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் அளந்து பார்க்க ஆட்சியபணை இல்லை என்றால் சரிதான். எனது வீட்டிற்கு மேற்கு பக்கம் தென்னை மரம் உள்ளது என்றால் சரிதான். அங்கு இதற்கு முன்பு ஒரு மாமரம் இருந்தது இப்போது பட்டுப்போய்விட்டது. தற்போது அங்கு ஒரு வேப்பமரம் உள்ளது. வழக்கு சொத்து உண்மையில் காலி மனை என்றாலும் நான் வழக்கில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தை பிரதிவாதி வாங்கி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டின் மேற்கு புறத்தில் மாடி படியை ஒட்டி சந்து உள்ளது என்றால் சரியல்ல புழகத்திற்காக ஒரு பாதை மட்டும் உள்ளது. அந்த பாதை வழியாக கொல்லைபுரத்திற்கு செல்லலாம் என்றால் சரிதான். மாடிபடியையும் பாதையையும் மேற்கு பக்கத்தில் வேலி உள்ளது என்றால் சரிதான். அந்த வேலி உள்ள விவரத்தை வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான். காலி மனைக்கு தெற்கே தெரு உள்ளது என்றால் சரிதான். அந்த தெரு வழியாக தான் பிரதிவாதி சென்று வர வேண்டும் என்றால் சரிதான் அது நாங்கள் அவருக்கு அனுமதி அளித்த வழியாகும். நானும் எனது சகோதரர் 1ம் வாதியும் சேர்ந்து 2018ம் வருடம் வழக்கு சொத்தில் ஒரு ஆர்சிசி வீடு கட்டினோம் என்றால் சரிதான். பிரதிவாதி இல்லாத சமயத்தில் பயன்படுத்தி அவரது நிலத்தை ஆக்கிரமித்து வீடு கட்டினேன் என்றால் சரியல்ல. நான் வீடு கட்டிய பிறகு பிரதிவாதி நன்னிலம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் சரியல்ல. நான் அந்த புகாரை மறைத்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் கட்டடப்பட்டுள்ள கட்டிடம் நடராஜனுக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. புல எண் 5/A1, 5/A2, 5/A12 ஆகியவை நிலங்கள் பிரதிவாதி அனுபவத்தில் உள்ளது என்றால் 5/A1 ல் உள்ள இடம் பிரதிவாதியின் இடம், 5/A2 , 5/A12 உள்ள நிலம் எங்களுக்குரியது. மூன்று புல எண்களில் உள்ள நிலங்களும் பிரதிவாதி அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. புல எண் 5/A2 நிலத்தை நடராஜன் வாரிசுகளிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி இடத்தில் ஒரு கழிவறை உள்ளது என்றால் சரியல்ல.

வழக்கு சொத்தை பார்வையிட்டால் உண்மை விவரம் தெரிய வரும் என்பதால் நீதிமன்ற ஆணையர் வேண்டி மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/.***

District Munsif -Cum- Judicial Magistrate,
Nannilam.